**தலைப்பு – 189 கல்விச் சேவைகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

கல்விச் சேவைகள் அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 ஒக்தோபர் 01 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல்

மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 8,526 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 8,304 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சின் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 220 மில்லியன் அதாவது தேறிய ஏற்பாட்டில் 2.58 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 8,053 | 7,908 | 144 | 1.79 |
| மூலதனம் | 473 | 396 | 76 | 16.07 |
| மொத்தம் | **8,526** | **8,304** | **220** | **2.58** |

## 2.2 முற்பணக் கணக்குகள்

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 18901 | 7.0 | 1.9 | 0.8 | 1.5 | 30.0 | 6.6 |

## 2.3 பொது வைப்புக் கணக்குகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 616 மில்லியனாக இருந்தது.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், கல்விச் சேவைகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 189 – கல்விச் சேவைகள் அமைச்சு

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

07 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,854,000 தொகையான மொத்த தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.2 கட்டுநிதிக் கணக்கு

நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாக பெறப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 15 சந்தர்ப்பங்களுக்குரியதாக வழங்கப்பட்டிருந்த ரூபா 247,125 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி செயற்பாடு நிறைவு பெற்று 02 மாத காலதாமதத்தின் பின்னர் தீர்வு செய்யப்பட்டிருந்தது.

### 3.3 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டு காட்டப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
| --- | --- | --- |
| ------------------------------------- | ---------------- | -------------------- |
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | |
| ------------------------------------------ | | |
| (i) நிதிப் பிரமாணம் 94 | 172,248,213 | அங்கீகரித்த நிதி ஏற்பாட்டை விஞ்சி கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப் பிரமாணம் 115 | 32,769,169 | முன்னைய கொடுப்பனவுகளுக்காக கல்விச் செயலாளரின் அல்லது அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (iii) நிதிப் பிரமாணம் 231 | 44,982,809 | செலவினங்களை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இல்லாமல் முற்பணக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை |
| (ஆ) சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கை | | |
| -------------------------------------------- | | |
| 2010 மெ 14 ஆந் திகதிய சீயூ/1/17/1 ஆம் இலக்க கடிதம் | 251,461 | அரச நிறுவனங்களில் சிறந்த செலவின முகாமைத்துவத்தை எதிரபார்த்து அரச வளங்களின் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்காக விதிக்கப்பட்டுள்ள எல்லைகளை மிகைத்து நடவடிக்கை எடுத்தமை |

## 3.4 முகாமைத்துவ பலவீனங்கள்

ரூபா 1,840,416 மொத்தக் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 18 பாடசாலை உபகரண உருப்படிகள் அதன் உத்தரவாதக் காலமான 12 மாதங்கள் கழியும் வரை பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன.

## 3.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை கீழே காட்டப்பட்டுள்ளது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 19 | 15 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 56 | 32 | 24 |
| (iv) | ஆரம்ப நிலை | 30 | 22 | 08 |
| (v) | ஏனையோர் (அமைய / தற்காலிக ஒப்பந்த அடிப்படை) | 04 | - | 04 |
| | மொத்தம் | 112 | 70 | 42 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 42 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.